**திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம்,**
**திருவண்ணாமலை பஞ்சாயத்து யூனியன்,**
**சின்னகல்லாப்பாடி கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**

முன்னிலை : **திருமதி. R.லட்சுமி தலைவர்**

ந.க. எண் : 1/2024 நாள் : 22/6/2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், சின்னகல்லாப்பாடி கிராம சர்வே எண்: **46/2, 46/14A,** விஸ்தீரணம் **1** ஏக்கர் **47** செண்டு பரப்பில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டது. உள்ளாட்சி மூலம் இறுதி ஒப்புதல் அளித்தல் – சார்பு.

பார்வை : நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் நடவடிக்கை இணையதள விண்ணப்ப எண்: FNG9WN4K/2024 தி.மலை நாள் : 5-06-2024

உத்திரவு :

பார்வையில் காணும் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் உத்திரவின்படி திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்னியம், சின்னகல்லாப்பாடி கிராம சர்வே எண்: **46/2, 46/14A,** **1** ஏக்கர் **47** செண்டும் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டதை தொடர்ந்து அரசாணை எண்: 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை 04-05-2017-ன்படி சின்னகல்லாப்பாடி ஊராட்சி அமைப்பு நில பயன் மற்றும் கட்டணம் 3 விழுக்காடு தொகை ரூ.13230-00 (ரூபாய் பதிமூன்றாயிரத்து இருநூற்று முப்பது மட்டும்) Scrutiny கட்டணம் ரூ.46000- மற்றும் சாலை பராமரிப்பு கட்டணம் ரூ. 10500-00 ஆக மொத்தம் ரூ.69730/- (ரூ. அறுபத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று முப்பது மட்டும்) சின்னகல்லாப்பாடி பஞ்சாயத்து வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. தொடர்ந்து மனை எண்கள் **1** முதல் **46** வரை உள்ள மனைகளுக்கு தொழில் நுட்பஇசைவு அளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைபடத்தின் உட்பிரிவுக்கும் உள்ளாட்சிகள் மூலம் இறுதி ஒப்புதல் அளித்த பஞ்சாயத்து தீர்மான எண் : 27/22/6/2024 இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் நீர் தேக்கதொட்டி கட்டும் இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கிடு போன்ற இடங்கள் பத்திரபதிவு எண்: **2959/2024** நாள்: **10-06-2024,** கிராம ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் பெயரில் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதை தொடர்ந்து திருவண்ணாமலை நகர ஊரமைப்பு உதவி இயக்குனர் திருவண்ணாமலை மாவட்டம் **ம.ந.ஊ.உ.இ. (தி.மலை)** எண்: **193/2024** என எண்ணிப்பட்ட தொழில் நுட்ப **ஒப்புதல்** வழங்கப்பட்டு சின்னகல்லாப்பாடி ஊராட்சி மன்றத்தால் **தாஜ் நகர்** பெயரிடப்பட்ட உத்தேச **46** மனைகளுக்கு சின்னகல்லாப்பாடி ஊராட்சி மன்றத்தால் ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு :
1. பார்வை 1-ல் அலுவலக கடித நகல்
2. அரசு வழிகாட்டி மதிப்பு
3. உரிய கட்டணம் செலுத்திய வங்கி ரசீது நகல்

R.லட்சுமி
தலைவர்
சின்னகல்லபாடி ஊராட்சி